

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்றிக் கண்

(கவிதைத் தொகுதி)

## நாகபூஷணி கருப்பையா

வெளியீடு

**சிந்தனை வட்டம்**
**14 உடத்தலவின்னை மடிகே**
**உடத்தலவின்னை.20802**
**ஸ்ரீலங்கா**

**தொலைபேசி** :- 08 - 493746 - 08-493892
**தொலை நகல்**:- 08- 497246
**மின்அஞ்சல்** :- puniyame@sltnet.lk
puniyameen@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்றிக்கண்

## கவிதைத் தொகுதி


| | | |
|---|---|---|
| நூலாசிரியை | :- | நாகபூஷணி கருப்பையா<br>இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்<br>கொழும்பு - 07 |
| முதலாம் பதிப்பு | :- | September 2003 |
| பதிப்புரிமை | :- | ஆசிரியைக்கே |
| வெளியீடு | :- | சிந்தனை வட்டம் |
| கனணிப்பதிப்பு | :- | Zeenath Nawaz<br>Chinthanai Vattam<br>14 Udatalawinna Madige<br>Udatalawinna 20802<br>T.P 08 - 493746 - 493892 |
| அச்சுப் பதிப்பு | :- | Creative Printers<br>No. 03/A, Bahirawakanda Rd,<br>Kandy.<br>T.P 074 - 472048 |

ISBN : 955-8913-08-1

100/-



இந்த

''நெற்றிக் கண்''
இலக்கியச் செழிப்பூட்டி
என்னை முந்தியிருக்கச் செய்த
என்
இரு கண்களான
அப்பா 'தேசிகர் கருப்பையா,
அம்மா 'காளியம்மா'
அவர்களுக்கு

- காணிக்கை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலாசிரியையுடனான சகல
தொடர்புகளுக்கும் ...

K. NAGAPOOSHANI
NO.677A/1, AHAMED ROAD,
SAINTHA MARUTHU - 14
SRI LANKA..

T/P. 067 - 22134
0777349737



## பதிப்புரை

சிந்தனை வட்டத்தின் 180வது வெளியீடாக சோதரி 'நாகபூசணி கருப்பையா' எழுதிய 'நெற்றிக்கண்' எனும் தொகுதியை வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். இத்தொகுதியில் மொத்தம் 40 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. 'நாகபூஷணி கருப்பையா'வின் எண்ணக்கருக்களாகப் பிரவாகித்த இக் கவிதைகள் சமூக உணர்வுமிக்கவை. யதார்த்தமானவை.

'சிந்தனை வட்டம்' உருவாக்கம் பெற்ற காலத்தில் நாடளாவிய ரீதியில் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கில் சிந்தனை வட்டத்தின் 7வது வெளியீடாக 1990 ஜுன் மாதத்தில் 'புதிய மொட்டுகள்' எனும் கவிதைத் தொகுதியினையும், 8வது வெளியீடாக 1990 நவம்பர் மாதத்தில் 'அரும்புகள்' எனும் கவிதைத் தொகுதியினையும், 59 வது வெளியீடாக 1996 ஜுலை மாதத்தில் 'பாலங்கள்' எனும் கவிதைத் தொகுதியினையும் வெளியிட்டேன்.

இந்த மூன்று கவிதைத் தொகுதிகளிலும் 21 இளம் எழுத்தாளர்களுக்கு; அன்று இடம் வழங்கப்பட்டது. உஸ்மான்மரிக்கார், நஜுமுதீன், மஸீதா புன்னியாமீன், தலவின்னை சிபார், அக்குறணை றிழ்வான், ரிஷானா ரஷீட், கலைமகள் ஹிதாயா, கலதெனிய நளீம், தமீம் அன்ஸார், மரீனா இல்யாஸ், என். நவரட்ணம், சுமைரா அன்வர், கலைநிலா சாதிகீன், இரா திருச்செல்வம், நாகபூஷணி கருப்பையா, கெகிறாவை ஸஹானா, தலவின்னை பூதொர, இஸ்லாமியச் செல்வி, பி.வி. நித்தியானந்தன், பஹிமா ஜஹான், நீலன்-அணை-ஜெயந்தன் ஆகியோரே அந்த 21 இளம் கவிஞர்களும் ஆவார். பத்திரிகைகயிலும், சஞ்சிகைகளிலும், வானொலியிலும் எழுதிவந்த இவர்களுக்குத் தமது கவிதைகளை நூலுருவில் ஆவணப்படுத்தும் முதல் சந்தர்ப்பம் சிந்தனைவட்டத்தின் மூலமாகவே கிடைத்தது.

மேற்குறிப்பிட்ட இளம் கவிஞர்களுள் பலர் இன்று பிரபல்யம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று விளங்குகின்றார்கள், தேசிய ரீதியில் விருதுகளைப் பெற்று வருகின்றார்கள், சுயமாக நூல்களை வெளியிடக்கூடிய அளவிற்கு வளர்ந்து விட்டார்கள். இதை எண்ணும் போது ஒரு வெளியீட்டாளன் என்ற வகையில் நான் மிகவும் பெருமிதமடைகின்றேன்.

அன்று சிந்தனைவட்டப் பண்ணையில் பாதம் பதித்த ஒன்பது பெண் கவிஞர்களுள் ஆறு கவிஞர்கள் சுயமாக தத்தமது நூல்களை வெளியிட்டுள்ளனர். இவர்களுள் நால்வர் சிந்தனைவட்டத்தின் மூலமாகத் தமது நூல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும்.

சிந்தனை வட்டத்தின் 99வது வெளியீடாக 'கலைமகள் ஹிதாயா' எழுதிய 'தேன் மலர்' கவிதைத்தொகுதியும், 100வது வெளியீடாக கலைமகள் ஹிதாயா, மஸீதா புன்னியாமீன் இணைந்து எழுதிய 'இரட்டைத் தாயின் ஒற்றைக்குழந்தை' கவிதைத் தொகுதியும், 174வது வெளியீடாக சுமைரா அன்வர் எழுதிய 'எண்ணச் சிதறல்கள்' கவிதைத்தொகுதியும் வெளிவந்தன. தற்போது உங்கள் கரங்களில் தவழ்வது சோதரி 'நாகபூஷணி கருப்பையா' எழுதிய 'நெற்றிக்கண்' கவிதைத் தொகுதி. இது சிந்தனை வட்டத்தின் 180வது வெளியீடாகும்.

'***ஈன்ற பொழுதில்பெரிதுவக்கும் – தன்மகனை சான்றோன் எனக் கேட்டதாய***' அடையும் பூரிப்பினைப்போல சிந்தனை வட்டப் பண்ணையில் பாதம் பதித்த கவிஞர்கள் தம் சுயநூல்களை வெளியிடும் போது நான் பூரிப்படைகின்றேன்.

சிந்தனை வட்டத்தின் ஏனைய வெளியீடுகளுக்குத் தரும் ஒத்துழைப்பினை சோதரி நாகபூஷணியின் 'கவி' நூலுக்கும் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

**புன்னியாமீன்**
முகாமைத்துவப் பணிப்பாளர்.
வரையறுக்கப்பட்ட சிந்தனை வட்டம் வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை.20802



பிரபல எழுத்தாளரும், கவிஞரும்,
வைத்திய நிபுணருமான
# டாக்டர் எஸ். நஜிமுதீன்
அவர்கள்
அன்புடன் வழங்கிய
## மதிப்புரை.

***ஆடுதல் பாடுதல் சித்திரம் – கவி***
***ஆதியினைய கலைகளில்,***
***ஈடுபட்டென்றும் உழைப்பவர் – பிறர்***
***ஈன நிலைகண்டு துள்ளுவர்.***

வானொலிக் கலைஞர் நாகபூஷணி கருப்பையாவின் 'நெற்றிக்கண்' எனும் கவிதைத் தொகுதியின் கவிதைகளைப் படிக்கையில் பாரதியின் மேற்கூறிய கூற்று எம்முள் வந்து செல்வதனைத் தவிர்க்க முடியவில்லை. குரலினாலும் உணர்வுமிக்க ஆற்றல் வெளிப்பாட்டினாலும் அநேக நேயர்களைக் கொள்ளை கொண்டுள்ள நாகபூஷணி, பேராற்றல்மிகு ஆயுதமொன்றைக் கையிலெடுத்துள்ளார். இவ்வளவு நாட்களும் அவர் வாய்பேசியது, இப்பொழுது அவரது கையும், அது பற்றிய பேனாவும் பேசத் தொடங்கியுள்ளன. எழுத்தின் மூலம் வெளிப்படுவது ஒருவரது சுயமேதான்.

தான் கண்டவற்றை, தான் உணர்ந்தவற்றை, தன்னைப் பாதித்தவற்றை, தன்னை மகிழ்வித்தவற்றை, தனது ஏமாற்றங்களை, தனது மாற்றங்களை என்று எல்லாவற்றையும் தாமாகவே, தன்னிலை நின்று பிறருக்குச் சொல்லும் போது மனது மிகவும் திருப்தியுறுகிறது. அந்த உணர்வு வெளிப்பாடு சுயபாஷையில், சுயநடையில், சகலவித மழலைத் தன்மையுடனும் தான் தொடங்க வேண்டும், இதற்கு எந்தவித இலக்கண இலக்கிய வரையறைகளும் இருக்கத் தேவையில்லை என்பதே எனது கணிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் நாகபூஷணியின் உணர்வுகள் பேசத் தொடங்கியுள்ளன. 40 கவிதைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொருவகை உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றன. தந்தையின் மீதான பாசமிகு நேசமும், மதிப்பும், பொறாமைப்படும் அற்பர்மேல் பரிதாபம், கள்ளமற்ற மனம், கபடமாய் மாறிய ஏக்கம், விழித்தபடி தூங்கும் மக்களின் அறியாமை கண்ட ஆற்றாமை, ஊர்மிளைக்கு நியாயம் கேட்ட உரிமைக்குரல், அலைகளைச் சிறைப்பட்ட பெண்ணுக்கு ஒப்பிட்ட அங்கலாய்ப்பு, தடைதகர்க்கும் துணிவு, சந்தியா காலத்தையும், மலைநாட்டையும் ரசிக்கும் அழகுணர்வு இப்படி ஒவ்வொரு கவிதைகளும் ஒவ்வொரு உணர்வுகளைத் தமது பாஷையிலேயே சொல்லி நிற்கின்றன.

நிஜங்களைத் தரிசித்த, தடம் பதித்த கோலங்கள் கவிதைகளின் வரிவடிவங்களில் பரிணமிக்கின்றன.

*நிஜங்களின்*
*வேதனைப்*
*பிரசவங்கள்*
*சங்கடங்களின்*
*அழுத்தத்தில்*
*கனக்கும்*
*இதயம்*
*சட்டென்று*
*எதைச் செய்யும்*
*பிரார்த்திப்பதைத் தவிர......*

மனவேதனையின் அழுத்தத்தை உள்மனதுள் புதைத்து, வேதனைச் சூட்டை மட்டும் வெளியில் விடுவித்திருப்பது புரிகிறது.

உணர்வுகளை அடக்கி வாசிக்கையிலும், ஒரு இளம்பெண்ணின் உள்மனது வெளியில் தலைகாட்டுவதை அவரால் தடுக்க முடியவில்லை. அவர் விழிபேசும் மொழி எவர்க்கும் புரியாமல் இல்லை. உவமான உவமேயங்களுடன் கூடிய விழிப்பாஷைக்கு மொழி உதவ வேண்டுமெனில்; உரைப்பவரின் கவித்துவம் துணைக்குவர வேண்டும். நாகபூஷணிக்கு அது தோள் கொடுத்திருக்கிறது.



தொழில் செய்யும் பெண்ணின் அன்றாட நிலைமையை எடுத்துரைக்கையில், அவரது உள்மனவெளியில் உணர்ச்சிகள் பீறிடுவது புரிகிறது. ஆனால் அவை உணர்ச்சிகளுடன் மட்டும் நின்றுவிடுவது பரிதாபகரமானது. பிள்ளையே வேண்டாம், இது ஈனப்பிறப்பென்று, புதுப்படைப்பையே வரவேண்டாம் என்று தடுக்கும் அளவுக்கு சமுதாய சீரழிவுகள் மலிந்து கிடப்பது யதார்த்தம்.

மழைக்கால மகிழ்ச்சியும், வெய்யிலின் வேதனையும், பார்வையின் பாவங்களும், தாலிக்கு கூலி தரும் சங்கடமும், நாகமான மண்புழுவின் பரிதாபமும், கலைஞர் வாழ்வின் கஸ்டங்களும், கூட்டு வாழ்வின் குதூகலிப்பும், நட்புக்களின் நயவஞ்சகமும் எனப் பலப்பல விடயங்களைத் தொட்டுள்ளார் நாகபூஷணி.

அவரது கவிதைத்துவத்தை நோக்குகையில் கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ளவை அதற்கு உதாரணங்களே.

*பிணமென ஆதல் ஒன்றே,*
*பிறப்பின் முடிவென்றறியாது,*
*மணக்கின்ற சாக்கடையாய்,*
*மாறிய மனித குலம் .... (அற்பம்)*

*தெளிந்தோடும் அருவிகளும்,*
*நீள்தொடராய்க் குன்றுகளும்,*
*வழிநெடுக மரங்களுடன்*
*வீசு தென்றல் தவழ்ந்துவர*
*களிகொண்டு ஆடவைக்கும்,*
*கவர்ச்சிமிகு மலைநாடு..........(வளமுள்ள மலைநாடு)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து வரும் இளம் கலைஞர்களில், கவிஞர்களில்; வளர்ந்துவிட்ட அறிவிப்பாளர் நாகபூஷணியும் இருக்கப்போகின்றார் என்பதற்கு இவரது இந்த கவிதைத்தொகுதி கட்டியம் கூறி நிற்கின்றது.

இவர்களை அன்புடன் அரவணைத்து ஊக்கப்படுத்தும் சிந்தனை வட்டம் பராட்டுக்குரியது. பன்னூலாசிரியரும், வெளியீட்டாளருமாகிய 'புன்னியாமீன்' அவர்களின் இந்தக் கைங்கரியம் மென்மேலும் சிறப்புற்று வளர வாழ்த்துவதுடன், நாகபூஷணி தனது எழுத்திற்குத் திரையிடாமல், எத்தனை தடைகள் வரினும் உடைத்தெறிந்து மலர்ந்துநிற்க எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**Dr. S. Najimudeen M.B.B.S, DFM**
**(Madical Officer)**
**Meternai and Child Health**
**D.P.D.H.S. Office, Kalmunai.**
**20. 08. 2003**



# பத்திரிகைகள் பதித்தவை...

## தொடரட்டும் அவர் பணி.

இலங்கை வானொலி வர்த்தக சேவை மாலை தோறும் வழங்கும் 'அந்தி நேர சிந்துகள்' அருமை. முன்பெல்லாம் பாடல்களாக மட்டுமே ஒலித்து வந்த இந்நிகழ்ச்சி தற்போது இலக்கியப் பார்வைகொண்ட படைப்புகளோடு மிளிர்கின்றது. நேயர்களின் இலக்கிய இரசனையுடைய ஆக்கங்களோடும், அறிவிப்பாளரது இலக்கியத் தொகுப்புகளோடும், கானம் பொழிகின்ற இந்நிகழ்ச்சியூடாக இசை, குரல், இரசனையுணர்வு என்பவற்றுக்கு அப்பால் சென்று பாடலின் வரிகளுக்கும், இலக்கியங்களுக்கும் இடையில் உள்ள தொடர்புகளை நயமாக மதிப்பீடு செய்து பார்க்க முடிகிறது. இந்நிகழ்ச்சி ஒலிக்கும் நேரமும் பொருத்தப் பாடுடையதாய் அமைவது இதன் காத்திரத்தை மேலும் ஒரு படி அதிகரிக்கச் செய்கிறது. மொத்தத்தில் பாராட்டுக்கு உரியவர் அறிவிப்பாளர் நாகபூஷணி தான். தொடரட்டும் அவர் பணி.

**- எம். அகிலன்.**
டிக்கோயா
(நன்றி: தினகரன்)

## தென்றலில் கலக்கும் நாகபூஷணி!

தனக்கென்று ஒரு தனிப்பாணி, அலாதியான இரசிகர் கூட்டம், மந்தமற்ற வாசிப்பு, களங்கமற்ற குரல்வளம், நல்ல செனமதி, துணிச்சல் என இன்றைய ஒலி, ஒளிபரப்புக் கலாசாரத்தில் மிக இயல்பாக ஒலி, ஒளிபரப்பிற்கு ஒத்துழைக்க மற்றவர்கள் இரசிக்கும் அளவிற்கு ஒளி, ஒலிபரப்புத்துறைகளில் பிரகாசித்துக் கொண்டிருப்பவர் நாகபூசணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு நிகர் இவரேதான். எவ்வித குறைபாடுகளும் இன்றி, எதிரான ஆர்ப்பாட்டங்களும் இன்றி ஒரு தலைசிறந்த ஒலிபரப்பாளராக 'தென்றலில்' இடம்பிடித்துவிட்டார். பல வருடகாலமாக தனது சொந்த முயற்சியால் ஒலிபரப்புத்துறையில் பல நுட்பங்களைக் கையாண்டு நேயர்களின் மனதில் சிம்மாசனமிட்டிருக்கிறார். நேயர்களின் இரசனைக்கு ஏற்றவாறு வளைந்து கொடுக்கும் தன்மை, பொறுமை, அலட்சியமின்மை, பிடிவாதமின்மை போன்ற இன்னோரன்ன தனிப்பண்புகளைக் கொண்ட இவர் தனக்கு வழங்கப்பட்ட நிகழ்ச்சிகளை மிகவும் அழகாகத் தொகுத்துத் தருகிறார். நிகழ்ச்சித் தயாரிப்பு, தொகுத் தளிப்பு, விளம்பரம், செய்தி வாசிப்பு என எண்ணிலடங்காத முறையில் தனது கல்வி, குரல்வள, எழுத்தாற்றலைக் கொண்டு ஒளி, ஒலிபரப்புகளில் மங்காத இடத்தை இவர் பெற்றுள்ளார்.

இவர் வெறும் அறிவிப்பாளராக மட்டுமின்றி இயல், இசை, நாடகத்துறையிலும் திறமை வாய்ந்தவர். சிறந்த ஆங்கில அறிவும் உள்ள இவர் குரல்வளத்தை பொருத்தமான முறையில், பொருத்த மான விடயங்களுக்குப் பயன்படுத்தி வருகிறார். தான் தொகுத்த ளிக்கும் எல்லா நிகழ்ச்சிகளிலும் நேயர்களை எழுதத்தூண்டி களம் அமைத்துக் கொடுத்து பல கலைஞர்களையும், எழுத்தாளர்களையும் உருவாக்கிவிட்ட பெருமை இவரையே சாரும். நேயர்களின் படைப்புகளை வரவேற்று காலம் தாழ்த்தாது குறைநிறைகளை தரப்படுத்தி படைப்பாளிக்கு மிகச்சிறந்த முறையில் களம் அமைத்துக்கொடுப்பது பாரட்டத்தக்கது. இவர் இருக்கும் இந்த இடம் இவரை மென்மேலும் அபிவிருத்தியடைய வைக்கும் என்பது திண்ணம். இவ்வாறு பல ஆற்றல்களோடு நேயர்களின் எல்லையற்ற நேசிப்பிற்கும். ஆதரவிற்கும் உரியவர் இவர். வாழ்க தென்றல், வளர்க இவரது பணி, ஆசி கூறுகிறோம்.

**– தாரிகா மர்சூக்**
குருநாகல்
(நன்றி : தினகரன்)



## காற்று வெளியினிலே....

மலையகத்தில் இன்னொரு பெண் அறிவிப்பாளராக விளங்குபவர் நாகபூஷணி கருப்பையா. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் தமது பட்டப்படிப்பை நிகழ்த்தி, தமிழ் சிறப்புக் கலைப் பட்டதாரியாக விளங்கும் நாகபூஷணி, பேராதனைப் பல்கலைக் கழகத்தில் எனது மேற்பார்வையில் எம். எஸ். எம். இராமையாவைப் பற்றித் தமது இறுதியாண்டில் ஆய்வு செய்தவர். இப்போது வானொலி அறிவிப்பாளராக விளங்கும் நாகபூஷணி ஒரு கவிஞரும் கூட. சில ஆண்டுகளாக வானொலி அறிவிப்பாளராக விளங்கிய போதிலும், மிக அண்மைக் காலத்தில் தமது திறமையை அவர் நன்கு வளர்த்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. ஆர்வத்துடன், தமது முழுத் திறமையையும் பயன்படுத்தி, தாம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை நாகபூஷணி செய்து வருகின்றார். நாள்தோறும் அவரது திறமை வளர்ச்சி கண்டு வருவது மகிழ்ச்சிக்குரியது.

**கலாநிதி துரை மனோகரன்**
கண்டி இலக்கியசெய்தி மடல்
June - 1997

## அந்திநேர சிந்துவுக்கு ஒரு 'பூஷண' விருது

சம கால நிகழ்ச்சிக்குள் வர்த்தக சேவை வழங்கும் 'அந்தி நேரச் சிந்துகள்' நிகழ்ச்சி தனித்துவம் பெற்று விளங்குகின்றது. இலக்கியங்களைப் போன்று வானொலிகளும், வைகரை, பொன்னந்தி, நிலாநேரம் ஆகியவற்றை கௌரவிக்கும் வகையில் பல ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

அந்திப் பொழுதை அழகு செய்யும் 'அந்தி நேரச் சிந்துகள்' நிகழ்ச்சியின் குறியிசைக்குள் புகுந்து வான் அலைகளில் தவழும் நாகபூஷணியின் குரல் முகவரியில்லாத ஓர் இலக்கியச் சுவையைப் பிரதிபலிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***நிகழ்ச்சியின் கவிதைச் சித்திரிப்பு***
***பூஷணி தனிச் சிறப்பு***
***கவி நயங்களில் தொனிக்கும் நயப்பு***
***இருக்கிறது அதற்கொரு தனி மதிப்பு-***

ஓர் இலக்கியக்கரு சங்க அகத்திணை, புறத்திணையில் ஆரம்பித்து பல ஆண்டுகளைத்தாண்டி நவீன கால சினிமாப் பாடலுக்குள் சங்கமிக்கும்போது ஏற்படும் சுவைக்கு கவித்துவத்தினூடாக அழுத்தம் கொடுக்கிறது நிகழ்ச்சி.

குறிப்பிட்டதொரு விடயம் சம்பந்தமாக புராண இலக்கியங்கள். இடைக்காலக் கவிஞர்கள். நிகழ்கால சினிமாக்கள் சொல்லும் வித்தியாசமான கருத்துக்களின் நடுவில் நின்று தனது கருத்தையும் அறிவிப்பாளர் முன்வைக்கும் போது ''தமிழின் வளமும், செழுமையும்'' பிரத்தியட்சமாக புலப்படுகின்றது. புராண காலங்களில் நிலவினால் மனிதன் ஆடையுடுத்தினான். இடைக்காலத்திலே நிலவொளியில் அவன் கடிதம் எழுதினான். இன்று நிலவின் கீழ் மனிதன் வாழ்க்கை நடத்துகின்றான். இந்தப் படிமுறை வளர்ச்சியை அறிவிப்பாளர் குறுகிய நேரத்தில் படம்பிடித்துக் காட்டுகின்றார். அது வியக்கவல்லது. இவ்வாறான நிகழ்ச்சிகளை ஒரு முறை கேட்டாலும் அவை நெஞ்சிலிருந்து நீங்குவதே இல்லை.

இலங்கையின் வானொலி நிலையங்களில் கடமைபுரியும் பெண் அறிவிப்பாளர்களை ''கவிதை சொல்லும்'' விடயத்தில் நாகபூஷணி மிஞ்சிவிட்டார் என்பதே பலரதும் கருத்து. சில கருப் பொருட்களைக் காட்சிப் பொருளாகக் காட்டும் திறம் இவரிடம் நிறையவே உள்ளது. சிலர் கவிதை சொல்லும் போது அவை கட்டுரை வடிவம் பெறும் சந்தர்ப்பங்களும் உண்டு. சிலர் கவிதை சொல்லும் போது அதில் வைக்கோல் சுவைகூட தெரிவதில்லை. ஆனால் நாகபூஷணி கவிதை சொல்லும் விதம் இறந்து கிடக்கும் இதய நரம்புகளையும் உயிர்ப்பிக்கின்றது.


***பாலை ரோஜா ரஸ்மின்*** (நன்றி: தினகரன்)



## வாழ்த்துப்பா.

## *சாகா வரம் பெறும்*
## *'நாகா' வின் நற்தமிழ்க்கவி!*

***- கவிச்சுடர் ரீ.எல். ஜவ்பர்கான்-***



தமிழ்தன்னைப் பேசுகின்ற உலகந்தன்னில்
தனித்துவமாய் இலங்கும் வான் ஒலியாய் இன்று,
அமுதெனவே ஒலிக்கின்ற தென்றல் தன்னின்
அறிவிப்பு நங்கையவள் நாகபூச(ணி)!
குமுறுகின்ற நெஞ்சுடனே காலம் தள்ளும்
குன்றுகளுக் கிடையில் வாழ் மாந்தர்க்குள்ளே;
அமுதாக வந்ததனால் தானோ நீயும்
அற்புதமாய் தமிழ்தனிலே நர்த்திக்கின்றாய்.

வானலையில் இவள் குரலோ ஒலிக்கும் போது
வண்டமிழோ உவகையதால் எழுந்து நின்று
கானமிசைக் கின்ற பெரு காட்சி தன்னை
காணுகையில் நெஞ்சமெலாம் மகிழ்ச்சிப் பூக்கள்.
தேனமுதாய் தெள்ளு தமிழ் நாகா வாயுன்
தெவிட்டாது வருவதுதான் சிறப்பு ஆகும்.
கானகத்து மான்மயிலும் எழுந்து ஆட,
கன்னியிவள் குரல் சொல்லும் கவிதை போதும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிப்பால் நெஞ்சமெலாம் நிறைந்து நிற்கும்
அழகுமலை தந்த பெரு நாகா இன்று
செறிவு நிறை அறிவுதனைக் கொண்டு இங்கு
செதுக்கிய நற் கவிகளினைக் கோர்வையாக்கி
நெறிதவழ நெற்றிக்கண் என்ற நல்ல -
நெஞ்சு நிறை கவிதை நூல் தருகின்றாளே
அறிவுதனை கொண்டநல் நாகா உந்தன்
அழகுதமிழ் கவிகளதோ என்றும் வாழும்!

மரபோடு புதுசுகளும் கலந்து இங்கு
மகிமையொடு வருகிறது நெற்றிக்கண்ணும்!
சிரம் தாழ்த்தி நிற்கிறதே இலங்கை பூமி
சீக்கிரத்தில் இவள் பெரிய ஔவையாக -
உரம் பெற்ற கவிக்குயிலாம் சரோஜினியாய்
உருவாவாள்! இவள் கவிதை காலம் வென்று
நிரந்தரமாய் அமைதியது பூத்து நிற்க,
நிச்சயமாய் உதவிடுமே வாழ்க நீயும்!

நாகா நீ எழுதுகின்ற கவிகள் எல்லாம்
நானிலத்தில் வாழுகின்ற மனுசங்கட்குள்,
சாகாவ ரம்பெற்று வாழும் என்று
சாற்றுகின்றேன்! உன் கவிதை எழுந்து பேசும்!
பாகாக உருகிவிடும் கவிதை காணும்
பார்தன்னின் மனசெல்லாம் என்றும் உந்தன்
நோகாத கவியெல்லாம் உலகை வெல்லும்
நோக்கங்கள் சிறப்பாக பெற்றாய் வாழ்க.



# நாகபூஷணியும் ! நறுந்தமிழ் பாக்களும் !!



80 களுக்குப் பின் செந்தமிழ் கவிதா விசும்பிலே உலா வந்த கவிதையாளர்களின் பட்டியல் விசாலமானது. எனினும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பெண்களில் ஒருசிலரே கவிதையுலகில் கால் பதித்து நம்பிக்கையை ஏற்படுத்திச் செயல் பட்டு வருகின்றனர். அந்த வரிசையில் ஒருவர் தான் இந்த நாடறிந்த பெண் கவிஞர் நாகபூஷணி.

நான் அறிந்த நல்ல தமிழ்க்கவிஞர். என் நட்புக்குக் கிடைத்த முதல் பரிசு இவர்.

இலக்கண வரம்பும், மரபும் மாறாது கவிதை புனையும் வல்லபம் மிக்கவர். வெல்லமென இனிக்கும் நல்ல தமிழோசை! சொல்லச் சொல்ல இனிக்கும் சுந்தரத் தமிழோசை! கவிதையென்னும் ஒளிப்படக் கருவி மூலம் தன்னிதயத்து உணர்ச்சிகளுக்கு வண்ணமான வடிவமைக்கும் கவி வல்லவள்.

கலை, இலக்கிய நெடும் விளிப்புக்கு விசுவாசமான மூலம் பற்றி சரியாகப் புரிந்து கொண்டுள்ள நாகபூஷணியின் சமூக நோக்கும் இன, மொழி, மத பேதமற்ற மானிடநேயமும் வெவ்வேறு வகைகளில் கவிதைகள் முழுவதும் இழையோடி நிற்பதை அவதானிக்கலாம்.

அடக்கமான சுபாவம் கொண்ட அறிவிப்பாளர். கவிதா வெறி கொண்ட உணர்ச்சிக்கவிஞர் என்பதே பொருத்தமாகும். இவரது கனம் மிக்க படைப்புகள் ஏறத்தாழக் கடந்த பாத்தாண்டுகளுக்கு மேலாக இலங்கையின் அனைத்து இதழ்களிலும் உலா வந்துள்ளன.

கம்பளையில் பிறந்த நாகபூஷணி ஆரம்பக் கல்வியை 3ம் தரம் வரை கம்பளை மகளிர் கல்லூரியில் பயின்றார். பிறகு; நாவலப்பிட்டி சென் அன்றூாஸ் மகளிர் கல்லூரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாம் தரம்வரை பயின்று உயர் தரத்தினை கதிரேசன் கல்லூரியில் கற்றார்.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பட்டப்படிப்பை ஆரம்பித்தவர். நாட்டின் அன்றைய நிலவரங்களால் சூழ்நிலைக் கைதியாகி பிறகு பேராதனை வளாகத்தில் 1994ல் பட்டப்படிப்பினை பூர்த்திசெய்தார்.

கண்டி மலையக வானொலிச் சேவையில் 1994ல் பகுதி நேர அறிவிப்பாளராக சேர்ந்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதி நேர அறிவிப்பாளராக 1995ல் தெரிவு செய்யப்பட்ட நாகபூஷணி தமிழ் தேசிய சேவையின் கல்வி நிகழ்ச்சிகளில் பணியாற்றினார். பின் வர்த்தக சேவையில் பகுதி நேர அறிவிப்பாளரானார்.1996ல் நிரந்தர தயாரிப்பாளராகவும், அறிவிப்பாளராகவும் உயர்வு பெற்றார்.

1998ல் ஐ.ரி.என் தொலைக்காட்சியில் அளிவிப்பாளரான நாகபூஷணி 1999ல் ''இதழியல் டிப்ளோமா'' கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தார். தேசிய தொலைக்காட்சியின் ''ஆயுபோவன்'' மற்றும் ''மனையாள் மண்டபம்'' போன்றவற்றில் தோன்றியதுடன் 2002 மார்கழித் திங்கள் முதல் இலங்கை ரூபவாஹினியில் செய்தி அறிவிப்பாளராகினார்.

இளமையிலிருந்தே கவி புனையும் திறனும், கட்டுரைகள் எழுதும் ஆற்றலும் கொண்டவர். இசையிலும், நடனத்திலும் கூட ஆர்வம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கவித்துவவீறும், கருத்துவீச்சும் ஆழ்ந்த சமூகப் பார்வையும் கொண்ட கவிதைகள் பலவற்றை மேலும் தந்து ஈழத்துத் தமிழ்க் கவிதையுலகிற்கு வளம் சேர்ப்பார் என நம்புகின்றேன்.

இந்த பைந்தமிழ்ப் 'பாவை'யின் நறுந் தமிழ் பாக்கள் இன்னும் செழித்துப் பூக்கட்டும். தமிழுக்கினிமை சேர்க்கட்டும் என இதயங்கனிந்து வாழ்த்துகின்றேன்.

*– கலைமகள் ஹிதாயா ரிஸ்வி –*



# என்னுரை

அரிச்சுவடி தொட்ட காலம் முதல்
அறிவிப்பாளரான இற்றை வரை
ஆற்றிய சாதனை ஏது மில்லை
ஆயினும்..

ஆங்காங்கே சலசலக்கும் எதிர்ப்பொலிகள்
ஆக்கிடலாம் என்னையோர்
அக்கினிக்குஞ்சாய்.

இனிய தொடக்கமாய்
இதழ் விரிக்கும் ''நெற்றிக்கண்''
இன்று நூலாய் வெளிவர
இவள் மனதில் ஆர்வத்தை தினம்.. தினம் ஊட்டிய
இனிய என் சகீ ஹிதாயா
இதயத்தில் என்றென்றும் நிலைத்து நிற்பாள்.

ஈன்றோர் ஆசிகளும்
அறிஞர் உரைகளும்
உயர்ந்தோர் வாழ்த்துக்களும்
ஊக்க மருந்தெனக்கு!

ஏலவே 'அரும்புகளில்'' இடம் தந்தென்
ஐயம் கலைத்த அண்ணன் 'புன்னியாமீன்'
மீண்டும் என் கவிதைகளை நூலாக்கித் தருகின்றார்,
நிச்சயம் என் வளர்ச்சிப் படிகளில் நினைவுக்குரியவர் அண்ணன்

ஒத்தடமாய் உரைகள் தந்த உள்ளங்கள்
ஓயா என் நன்றிக்கு உரியவர்கள்.

பிரியமுடன்

**– நாகபூஷணி –**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
கொழும்பு - 07
தொலைபேசி- 0777 - 349737



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நெற்றிக் கண்



(கவிதைத் தொகுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தந்தை



இன்பத்தமிழ் நயம் ஏற்றமிகு செய்யுள்கள்
இளவயதில் கற்றுத்தந்த நல் ஆசான்.
எண்ணக் குமுறலொடு எல்லையற்ற நகைச்சுவையும்
எப்போதும் பகிர்ந்துகொண்ட ஒரு நண்பன்
துன்பச் சாயலொன்று முகத்திலே கண்டிட்டால்
தயங்காமல் தட்டிக் கொடுக்கின்ற மந்திரி
சின்னத் தீங்கேனும் சிந்தையில் கொள்ளாத
செப்பமுறு உயர் பண்பில் தெய்வம்
கண்ணனவன் பாரதியின் கருத்தில் நிறைந்தாற்போல்
நண்பனாய் மந்திரியாய் நல்லாசானாய்
என் மனதில் குடியிருக்கும் இறவாத உறவு.
●



# ஏன்?

அரிச்சுவடி தொட்டு
அகரம் தெரிந்திடா வயது
ஆசை என்ற பதத்துக்கு
அர்த்தம் புரியா மனது.
அயலானைக் கூட
அன்புள்ள உறவாய்
எண்ணிக் களிக்கின்ற
கபடில்லாப் பருவம்.
இன்னதுதான் எந்தன் மதம்
என் இனத்தான்
என் சுற்றம்
என்றறியாப் பால் மனது
பாழாய் ஆனது
பருவம் - வந்து தொலைத்த பின்னே.!
புரியாத வயதினிலே
புத்தனைப் போல்
நம் மனது,
புரிந்துணரும் வயதினிலே
பித்தரென மாறியதேன்?...........
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியாமை

கூடை சுமந்த கரம்
கூனல் விழுந்த உடல்
குளிர் தாக்கும் அனுதினமும்
தளிர் கொய்தே தீர வேணும்
அட்டை உறிஞ்சும் ரத்தம்
அதிகாரம் உழைப்புறிஞ்சும்
அசட்டை இரண்டிலும்தான்
அறியவில்லை காரணந்தான்
கணனி கண்ட யுகம்
காலத்தின் விரிவாக்கம்
காணாத ஓர் உலகாய்
விழித்தபடி ஒரு தூக்கம்
விடியலிலும் அமாவாசை
கொழுந்து விட்டெரியும் வாழ்க்கை - அதில்
குளிர்காயும் குருட்டுத்தனம்.
●





# அற்பம்.

மனமது அழுக்கு மூட்டை
மனிதனது சுமக்கும் கழுதை
இனமதன் மேன்மை கெட்டு
ஈனமாய் ஆனதிப் பிறப்பு

தனக்கென உயர்வு தேடான்
தன்னிலை உணர மாட்டான்
பிணக்குகள் புரிந்து பிறர்
புகழுக்குத் திரையிடுவான்.

பிணமென ஆதல் ஒன்றே
பிறப்பின் முடிவென்றறியா(து)
மணக்கின்ற சாக்கடையாய்
மாறிய மனித குலம்

சனத்திரள் புகழுரைகள்
சம்பாதிக்க வழியறியார்
இனத்தவன் திறமை கண்டு
தினம் தினம் புழுங்கிச் சாவார்.

கணக்கிலா கயமை குணம்
கணமொரு நிறமாற்றம்
வனத்தில் வாழ் விலங்கினமும்
வாய் விட்டுச் சிரிக்கும் கண்டு.
●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்றிக்கண்



அன்றொரு பௌர்ணமியில்
நிலா மிதக்கும் வான் பார்த்து
நித்திரைக்குத் தவமிருந்தேன்.

வான் மேகம் விலக்கி,
ஒரு வஞ்சி
என் முகம் பார்த்துப்
புன்னகைத்தாள்.

கண்களிரண்டும் கசக்கி
கனவா? காரிகையா? என
முணு முணுத்து,
உற்றுப் பார்த்தேன்.
உலக அழகியோ?
ஒரு கணத் தடுமாற்றம்
நித்திரையில்லாமல்
பித்தேதும் பிடித்ததுவோ
உள்ளுக்குள் பல கேள்வி.

''குழப்பம் வேண்டாம்''
தேனாய்த் தித்தித்த குரல்
பின்னணிப் பாடகி யாரேனுமோ?

''நான் சீதை''
விழி விரித்து
நான் கேட்டேன்
ஓ.......
''கம்பன் படைத்த
காவிய நாயகியா?.....''
ஆமோதிப்பாய்
சிறு தலையசைப்பு.



மௌனம்
கலைத்தாள் சீதை
''அன்று தொட்டு
இன்று வரை
துயர் சுமந்த பெண்ணுக்கு
நான் உவமை.
பொறுமைக்கு என்பெயரே
எடுத்துக் காட்டு.
அன்றடைந்த துன்பச்சுமை
அதனாலும் இறங்கவில்லை''
குரலில் ஆதங்கம்.
''ஆறாத காயமோ''
என் குரலில்
ஏளனம்.

மலர் விழியில்
கேள்விக் குறி

ஊர்மிளை என்றொருத்தி....
என் வார்த்தை இடைமறித்து
''சொக்கத் தங்கமவள்
புகழ் சொல்ல மொழியில்லை''
என்றாள்,
குரல் நடுங்க.

''சொக்கத் தங்கமதை
சொற்பமுமேன் நினைக்கவில்லை''?
என் கேள்வி.
''யார் மறந்தார்''?
அவள் கேள்வி
என் விரல்
சுட்டியது - மைதிலியை
பூவிழியில் நவரசமும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாடிக்குள்
நான் பார்த்தேன்
‘‘இராமனைப் பிரிந்து
வாழேனென்று - நீ
பின்தொடர்ந்தபோது - ஒரு
பேதைப் பெண் கணவன்
வந்தான் காவலுக்கு
சீதை போல் பெண்தானே
அந்தப் பேதைதனை
ஏன் மறந்தாள் சீதை?.
துணை அழைத்து
பேதை அவள் மனதில்
தீமூட்டிச் சென்றதாலோ
அசோகவனத்திலுன்னை
அரக்கன் சிறைவைத்தான்’’
நெடுநாள் என்
நெஞ்சுக்குள்
குடியிருந்த கேள்வி.

‘‘சுமை இறக்க வந்தேன்
சுமை கூட்டி விட்டாய்
சுமை கூட்டி என்னை
சிறை வைத்தாய் மீண்டும்’’
சொல்லியபடியே சீதை.
முகில் மூடி மறைந்தாள்.

மனச்சுமை இறங்கி
நான்
சுகமான நித்திரையில்!
●





# சிறை

கரை தொட்டு விளையாடும்
அலை ரசித்து மகிழ்ந்திருந்தேன்
குறையாத அன்பினிலே அலை
கூடிக் கூடி மகிழ்கிறதோ
கரைத்துக் கரையை உள்வாங்கி
காதல் மனதுள் சேர்த்திடுதோ

நுரைக்கும் கேள்விக்குள் நானும் நின்று
நெடுநேரம் அலைதனை ரசித்திருந்தேன்
சிறையிருக்கும் அலையின் நிலைபார்த்து
சிந்தனை ஏனடி என்றாள் தோழி
முறைத்து நான் அவள் முகம் பார்க்க
முறுவலித்தே பதில் அவள் சொன்னாள்.

கரை வைத்த சிறை மீற முடியாமலே
விரைந்தோட முடியாது தோற்கும் அலை
தரை வாழும் மனிதர்களின் வட்டத்திலே
தடுமாறி நிற்கின்ற பெண்கள் நிலை.

உரை கேட்ட ஓர் நொடிக்குள்
உணர்ச்சி பெற்றேன்
கரை மீது அலை கொண்ட காதல் என்ற
கணிப்பீட்டில் தவறுண்டு என்றுணர்ந்தேன்.
●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனில்லை...

பிழையில்லை பிழையில்லை
புதியன புகுதலில் பிழையில்லை.

சரியில்லை சரியில்லை
களைகளை விதைப்பது சரியில்லை.

விலை தந்தே நாம் பெறுவதற்கு
புகழொன்றும் ஒரு பொருளில்லை.

தலையெடுத்தொருவன் நிமிர்ந்துவிட்டால்
தடைகளவனுக்குப் பொருட்டில்லை.

இலைமறைகாயென் றிருந்ததாலும்
இருக்கும் திறமைக்குத் திரையில்லை.

வெல்லும் துணிவு இருக்கையிலே
வெற்றிக்கு வாழ்வில் வழியாயில்லை?

●






# அழகின் சிரிப்பு

இளந்தென்றல் மெய்தீண்டி விளையாடும்
இலையோடு தளிரெல்லாம் தலையாட்டும்
நெளிந்தோடும் நீரோடை தரும் பாட்டு
நிலவுக்கு அதுதானோ தாலாட்டு
கலக்கின்ற பொழுததுதான் மாலையுமிரவும்
காணாத அழகெல்லாம் காட்சியில் விரியும்.

ஆகாயம் இருள் போர்த்த ஆரம்பிக்கும்
அவனியும் மெல்லெனவே இமை ஒடுக்கும்
அந்தியுடன் இரவுவந்து கைகோர்க்கும்
அணி வகுத்துப் பறவையினம் இடம் திரும்பும்
மேகம் மறைத்த நிலா முகம் காட்டும்.
மோகம் கொண்டு அல்லி இதழ் விரிக்கும்.

பொன்னந்தி மாலைக்கு ஓரழகு - அது
போனபின் வரும் இரவு ஓரழகு
என்னென்று சொல்வது ஈரழகும்
இணைந்தே வருகின்ற பேரழகை
கண்ணிரண்டு போதாது காண்பதற்கு
கலையுலகு இதுவன்றோ வேறெதற்கு?

●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தாயின் விதி...

தாய் மலையேறிக் கொழுந்தெடுத்தாள்
தன் மகனை ஆளாக்க
பின் கைநிறையப் பொருளீட்டி
காப்பான் அவனென்று
எண்ணும் எழுத்தும் கற்க - மகன்
ஏடெடுத்துப் பள்ளி சென்றான்
கண்ணும் கருத்துமாக அவன்
கல்வி மட்டும் கற்கவில்லை
கண்ணுக்கு அழகான கன்னியையும்
கைபிடித்தான் பட்டணத்தில்
மனைவிக்கு லயத்தைக் கண்டால்
மயக்கத்துடன் வாந்தி வரும்
மண் வீட்டில் தான் நடந்தால்
மென் பாதத்திலும் வெடிப்பு வரும்
கண் அவன் அல்லவா அவளுக்கவன்
கை காட்டித் தாய்க்கு மெல்ல
கனிவுடன் விடை பெற்றான்.

படித்தவர்கள் ரெண்டு பேரும்
பரதேசி வாழ்வெதற்கு
அடிவயிற்றில் எழுந்த மூச்சை
அடக்கியே கூறிவிட்டு
தடியோடு ஒரு கூடை
தாங்கி மலை ஏறுகிறாள்
படியளக்க யாருமில்லை - தன்
பாழ் விதியை நொந்தபடி.
O

*09 -12 - 1990 வீரகேசரி*




# வளமுள்ள மலைநாடு...

நெளிந்தோடும் அருவிகளும்
நீள் தொடராய்க் குன்றுகளும்
வழிநெடுக மரங்களுடன்
வீசு தென்றல் தவழ்ந்து வர
களி கொண்டு ஆடவைக்கும்
கவர்ச்சி மிகு மலைநாடு.

வரட்சி எங்கள் நிலத்திலில்லை
வாடி நிற்கும் பயிர்களில்லை
திரட்சி கொண்ட கனிகள் தரும்
நெடிதுயர்ந்த தருக்களிலே
புரட்சி கீதம் புட்கள் பாட
சொர்ச்கமான மலைநாடு

முகில் தவழும் மலைகளிடை
முகம் மறைப்பாள் வெண்மதியாள்
துகிலெனப் பச்சைப்பயிர்
தரையெலாம் விரித்திருக்கும்
அகிலம் உயர உழைப்போர்
தனைக் கொண்ட மலை நாடு.
O

*08 -07 - 1990: சிந்தாமணி*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாருக்கு நையாண்டி?

என்ன அது
அப்படியொரு ஏளனச்
சிரிப்பும் கேலியும்?
கொஞ்சம்
கற்றுவிட்ட தவளைகளின்
கர்வக் கத்தல்களா?
சொந்த மண்ணின்
சோதர வர்க்கத்தின்
பாமரத் தனத்தை
சொல்லிச் சிரிக்க
வெட்கமாயில்லை.
வித்துவான்களென்ற
நினைப்பில்
அவர்களை
விகடகவிகளாக்குகிறீரே!
நீங்கள்
கற்றுவிட்டதால் மட்டும்
தலை நிமிரப் போவதில்லை
உங்கள் நகைப்பு
அயல் வீட்டானின்
அறியாமையைப் பார்த்தல்ல
நீங்கள் நகைப்பது
உங்கள் பிம்பங்களை
ஆம்
உன் சமுதாயம்
உன் கூட்டம்
எங்கே ஓடப் பார்க்கிறாய்?
எந்த உயரம் போனாலும்
நீ
அந்த மண்ணில்தான்.
நின்று கொண்டு
வீழ்ந்து கிடப்பவர்களைப்
பார்த்துச் சிரிக்காதே.
0





உன்னைச் சுற்றிப்பார்
நாற்புற திசையினின்றும்
உனை நோக்கி
நையாண்டிகள்
தட்டியெழுப்பு உன்
சமுதாயத்தை
கவிதையிலும் கதையிலும்
சமுதாயச் சீர்திருத்தம்
பேசிப் பயனில்லை.
அவை
உனக்கான விளம்பரங்கள்
வேதனைப்படு
வெட்கப்படு
உயர உதவு
தயவு செய்து
அண்ணார்ந்து பார்த்து
காறி உமிழாதே
பதவியும் பட்டமும்
பிறந்த மண்ணினின்றும்
பிரிக்குமானால்,
அறியாமை ஊருக்கல்ல
நிச்சயம் உலகுக்குத்தான்
நடித்தது போதும்
நல்லது செய்.
0



31 –05 – 1992 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதாரணங்கள்.

அதிகாலையின் - அழகுப்
பொழுதினிலே
பென்னம் பெரிய
இலைகளில்
ஓய்யாரமாகப்
படுத்துறங்கும்
பனித்துளிகள்
சட்டென்று
காணாமற் போவது
எங்களது
உறவுகள் சில,
நாங்கள்
வறுமைக்குள்
விழுகிறபோது
சட்டென்று
காணாமற் போவது போல்
எனக்குப் படுகிறது
உங்களுக்கு........?

உயர்ந்த மலைகளில்
உற்பத்தியாகி
பள்ளத்தை நோக்கிப்
பாய்கின்ற அருவிகள்
உயர்ந்த மனிதர்கள்
சிலரின்
தாழ்ந்து செல்கின்ற
எண்ணங்களைத்தான்
எனக்கு
நினைவு படுத்துகிறது
உங்களுக்கு.......?

நிறைந்த நீராவியுடன்
பரந்த வானத்தில்
அலைகின்ற மேகங்கள்
பொருள் சேர்த்துப்
பின்னும் அலைகின்ற
மனிதர்களைத்தான்
எனக்கு
ஞாபகப் படுத்துகின்றது
உங்களுக்கு.......?

இயற்கையின்
மெளன நடப்புகள்
பல
இரும்பு மனிதர்களின்
இரக்கமற்ற
செயல்களைத்தான்
எனக்கு
நினைவு படுத்துகிறது.
உங்களுக்கு........?
0





# நிஜங்கள்



இதயத் துடிப்பைச்
சட்டென்று
அடக்கி வைக்கும்
வேட்டுக்களின்
முழக்கங்கள்.
வீதிகளில்
பரபரப்பு
ஓ......
பீதியில் தோய்ந்த
முகங்கள்
அவசர நிர்ப்பந்தங்கள்
அந்தச்
சில நிமிடங்களில்
மணற் பரப்புகளில்
குருதிக் கோலங்கள்
அடுத்த
சில நிமிடங்களில்
வழமையான நடப்புகள்.
இவர்கள்
இவற்றுக்கென
வழக்கமாகிவிட்ட
பாவாத்மாக்கள்
எனதுமட்டும்
புதிதான
அனுபவம்!
இவை
நிஜங்களின்
வேதனைப்
பிரசவங்கள்
சங்கடங்களின்
அழுத்தத்தில்
கனக்கும்
இதயமோ
சட்டென்று
பிரார்த்திப்பதைத்
தவிர
வேறென்ன
செய்ய முடியும்?
0

16 – 04 – 89 தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைகளைக் காணவில்லை.

இவர்கள்
தமது வாழ்வெனும்
ஏழ்மை
விளையாட்டரங்கில்
ஓடித்திரிந்து
ஓட்டிக் கொண்ட
வறுமை அழுக்கைக்
கழுவப்போய்
தீப்புண்களுடன்
தெருவுக்கு
விரட்டப்பட்டவர்கள்.

வாழ்க்கையேட்டில்
வறுமையை மட்டுமே
வரவாக்கியவர்கள்.

வயிற்றைக் கட்டி
சேர்த்த துளிகளில்
வான ஊர்தியில்
வசந்தத்தின்
தாலாட்டைத்
தேடிச்சென்று
சூறாவளியால்
இன்று
சொந்த தேசத்துக்குள்
தூக்கியெறியப்பட்டவர்கள்.



கட்டுக்கடங்காத
ஆசை வெள்ளத்தால்
கரை கடந்து சென்று
காசு புரட்ட எண்ணி
கரை காணாது
கண்ணீர் வடிக்கும்
காரிகையர்.

02 -09 - 1990 தினகரன்



# நாங்கள் மத்தளங்கள்...

மாடாய் உழைத்து நிதம்
மண் தரையில் துயின்று
ஓய்ந்ததோ எங்கள் இன்னல்
நாடாம் இதை உயர்த்த
நல்லுழைப்பை மட்டும் கொண்டோம்
பாடாய்ப் படுகின்றோம் - நாம்
படும் துயரை யாரறிவார்?
எங்கோ எவர் எவரோ
எதையோ நடத்தி வைக்க
இங்கே எம் தலையில்
எல்லாம் விடிவதனால்
பொங்கும் வேதனைக்குள்
போராடும் மத்தளம் நாம்
தப்பு என்பார் அதற்கோ
தாளம் ஒரு பக்கம்தான்
தப்பேதும் செய்யவில்லை
தடியடியோ இரண்டு பக்கம்
வேராய் நின்று நம்மவர் நாடெனும்
விருட்சத்தைத் தாங்கும் போதும்
சோறு உண்ணக் கூட
சொற்ப நிம்மதி இல்லை இங்கு
நாறுகின்ற தெங்கள் கூட்டம்
நன்கிதை அறிவார் யார்?

02- 12 - 1990 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் காட்டும் ஜாடையிலே!

சரம் கோர்த்த
விரல் சேர்ந்த பூமணமாய்
மனம் சேர்ந்த
உன் நினைவில்
கனவு தேக்கி
என் விழி பேசும்
மொழி உனக்கு
இன்னுமா புரியவில்லை?

அடம் பிடித்து
அழுகின்ற குழந்தை போல
உன் இடம் தேடி
ஒடுமென் எண்ணமதை
படம் பிடித்துக்
காட்டுமென் விழிகள் பேசும்
மொழி உனக்கு
இன்னுமா புரியவில்லை?

விபத்து நடந்த பின்னே
விரைந்து வரும் காவலர் போல்
அவசியம் ஏதுமின்றி
அடிக்கடி உன்முன்னே
வந்து போகும் எந்தன்
விழிபேசும் மொழி உனக்கு
இன்னுமா புரியவில்லை?



கையிருக்கும் பொருளை
காணவில்லை என்றபடி
கணமொரு முறை
உன் கண்களுக்குள் விடைதேடி
என் விழி பேசும் மொழி உனக்கு
இன்னுமா புரியவில்லை?

ஆடை உலர்த்த
வெய்யில் தேடும் பெண்ணாய்
ஆசை உணர்த்த
உன் வழி தேடும் எந்தன்
விழி பேசும் மொழி உனக்கு
இன்னுமா புரியவில்லை?

தேன் கூட்டைக் கலைத்தவுடன்
துரத்துகின்ற தேனீயாய்
என் உள்ளம் கலைத்த உன்னைத்
துரத்தி வரும் என்னுடைய
விழி பேசும் மொழி உனக்கு
இன்னுமா புரியவில்லை?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படி தாண்டிப் போனாலும்.....

அன்புச் சோதரிக்கு அரணிட்டுப் பாதுகாப்பு
அடுத்த பெண்ணென்றால் அற்பமாய் ஒரு நினைப்பு
அடியெடுத்து வைத்து விட்டால் வேலைக்கென்று
அழைத்தவுடன் செல்வாளோ மானமற்று.
அற்பச் செயல் பலதும் மனங்கொண்டு
அணுகித்தான் பார்கின்றார் நிலைகெட்டு
அருவருக்க வைக்கின்ற பல்லிளிப்பு
அளவெடுக்கும் கண்களிலே பரபரப்பு
அறைந்தே கொன்றுவிட மனம் துடிக்கும்
அசிங்கத்தை எண்ணியெண்ணி மனம் வெதும்பும்
அநாவசியப் பேச்சாலே ஒரு முயற்சி
அக்கறை விசாரிப்பில் தனிக்கவர்ச்சி
அடிமாட்டு இனமென்று ஒரு நினைப்போ
அவர் போலும் அழுக்கென்றே ஒரு கணிப்போ.

0





# ........ ? ........

கருக் கொண்ட துயரம்
கடிதெனவே வளர
சுடுகாட்டுப் புதரான வாழ்க்கை

இடம் பெயர்ந்து
நடை பயிலும் நாட்கள்
அடிவைக்கும் இடமெல்லாம்
முட்கள்

பெண்ணாகப் பிறந்ததனால்
பீழை
ஆணான போதும் பல
கவலை.
வானூர்ந்து மண்ணூர்ந்து
தாக்கும்
ஆயுதம் போல
துளைத்தெடுக்கும் நோக்கு

அதிகாரம் கைப்பிடித்த
வாழ்க்கை - எங்கள்
அகராதி தொலைத்தது பல
வார்த்தை

எட்டி வைக்க
எடுத்த பாதம்
இட்டெடுக்குமுன்
இழந்தோம்
பட்டுப்போன
பூச்சிகள் நாம்
பட்டாம் பூச்சி
ஆவதெப்போ?

0





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவு பெறு....

வரவில்லா நிலையுணரா
வாழ்க்கைச் செலவில் நட்டம்
நிறைவில்லா மனமுடையோர்
நிம்மதிக்குப் பெரும் பஞ்சம்
குறையில்லா மனிதரென
குவலயத்தில் யாருமில்லை
திரைப் படத்துப் பாத்திரமாய்
தேவையில்லை ஒரு எண்ணம்.

எண்ணம் விரித்து நின்று
இடையறாது உழைத்து வாழ
திண்ணம் கொண்டு நல்ல
திடமுடன் உடல் பேணு
மண்ணில் மடியுமட்டும்
மடியேந்தந் தேவையில்லை
கண்ணில் ஒருபோதும்
கலக்கமொரு கண்ணீரில்லை.

இளமைக் காலமிது
இனிமேல் வந்திடாது
நிலைமை தனை - யுணர்ந்து
நாட்கள் பேணி நல்ல
விலையை உழைப்பில் பெற்று
வீண் சோம்பல் போக்கி ஒரு
தலைமை வகித்து இல்லம்
தளைக்க வாழ்ந்துவிடு.

எறும்பின் நல்லுழைப்பு
தேனீக்கள் சுறுசுறுப்பு
துரும்பின் பேருதவி
தெரியும், பிறகெதற்கு





அறிவில் குறைந்ததொரு
அற்ப விலங்கானாய்
விரிந்த உலகமிது
விரைந்திடு காலமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம்....



பிள்ளை வரம் வேண்டிப்
பிரார்த்திக்கும் அன்னையருள்
பிள்ளை இல்லையென
பேருவகை எந்தனுக்கு
இ.்.தென்ன
பேய்க் குணமா?
பிதற்றுகிறாள்
என்றென்னைப்
பரிகசிக்கும்
பெண்ணினமே!
பொய்யொரு பித்தலாட்டம்
புறங்கூறல், கொலை களவு
இன்னும்
அவதூறு, வல்லுறவு
அசிங்கங்கள்
நிறைந்தபாரில்
அற்புதப் படைப்பந்த
மழலை நிழல்
படலாமோ?
தாய்மைப் பண்பறியா
ஈனர்
தாராள புழக்கத்தில்
தூய்மையது
அற்று விட்ட
அறங்கெட்ட பூமிக்கு
இன்னுமொரு
ஜீவனுமேன்?
பொல்லாத உலகில்
நாம் படும்பாடு போதாதோ.
பெற்றோரைப் பிரிந்து
ஒற்றையில் நாம்
நிற்பது போல்
ஒரு நாளில்
அதற்குமொரு
கதிவேண்டாம்.
நின்றாலும் நடந்தாலும்
குறை கூறும்
உலகத்தில்
மனுக் குலத்தின்
புதுப்படைப்பு
வேண்டவே வேண்டாம்.

0



# பெற்ற கடன்

எல்லோர்க்கும் கிட்டாத வரமெனவே
இறுமாந்துக் கரு சுமந்தாள்
சால்புடைய மகனாக்க நற்
சரிதங்கள் தான் படித்தாள்.
வலியோனாய் நீ வளர - தான்
வெறுத்ததையும் மகிழ்ந்துண்டாள்.

காலம் வரக் காத்திருந்து
கைசுமந்து மடியேந்தி
வேளை தவறாமல் விடி
விளக்காகி வெளிச்சமிட்டாள்
நூலாய் இளைத்தும் தன்
நாவின் ருசி மறுத்தாள்.

பள்ளி முடியும் வரை தினம்
பாதையிலே காத்திருந்தாள்
கல்லூரி காலத்தில் ஏராளக்
கனவுகள் கண்டிருந்தாள்.
உள்ளூரில் உன் புகழ்
உரைக்கக் கேட்டு, மகிழ்ந்திருப்பாள்.

நல்லதொரு விலையும் பெற்று
நீ வாழத் துணை தேடி
இல்லறம் பேண வைத்தாள்
இப்போது அவள் பாவம்
விலங்காகி உன் வீட்டுக் காவலுக்கு
விலை தந்தாள் பெற்ற கடனுக்கு

0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொ(ல்)லை பேசி

சிங்காரச் சிணுங்கலிலே
சேதியின் வரவு கூறி
நிமிடக் கணக்கெடுப்பில்
நிதிதனை வசூலிக்கும்.

கைக்கு அடக்கம் தான்
கட்டாய தேவைதான்
அவசர உலகிலே
அதுவின்றி சிரமம் தான்.

ஆனாலும் சில நேரம்
அது தரும் சங்கடம்
மும்முர வேலைதனில்
முகம் சுளிக்க வைத்து விடும்.

வருமான அழைப்பு
வரும் நேரம் மகிழ்ச்சி
குறையாத நட்பின்
குரல் கேட்கக் குளிர்ச்சி.

பிழையான நபரின்
முறையற்ற அலட்டல்
உயர் ரத்த அழுத்த
அபாய முண்டாக்கும்.

அங்கிங்கொணாதபடி
எங்கும் நிறைந்து
அவசரத் தகவலைப்
பரிமாற உதவும்



அப்போது சந்தோஷம்
ஆனாலும் மாதமொன்றில்
கட்டணக் கணக்கெடுப்பு
கதிகலக்க வைத்துவிடும்.

இன்பமும் துன்பமும்
இவ்வுலகில் இயற்கை
கையடக்கத் தொலைபேசி
கதையும் அதுவேதான்.
0





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைக் கால மகிழ்ச்சி

குளிர் காற்று குடை பறிக்க
தளிர் மேனி நடுநடுங்க
பளீரென்று வரும் மின்னல்
பார்வை தனைத் தாக்க
பொழிகின்ற மழையருவி
பொன் மேனி நனைக்கும்

அடம் பிடிக்கும் இடி
அபிநயிக்கும் செடி கொடி
கடை விரிக்கும் வெள்ளத்தில்
கால் பதித்து நடை பயின்று
விடையறியா வாழ்வை மனம்
வினாடிகளில் மறக்கும்.

மனசுக்குள் ஒழிந்திருக்கும் குழந்தை
மழை கண்டு தலை நீட்டும்
சனக் கூட்டம் மறந்து நடுத் தெருவில்
சந்தோஷக் கும்மாளம் போடும்
இனம் புரியா உணர்வெங்கும் பொங்க
இறகு முளைத் தெண்ணம் பறக்கும்.

நீர் உதைத்துப் பந்தாடும் கால்கள்
நீத்தும் நடுவகிட்டில் துளிகள்
நார்போல் சொரிகின்ற மழையில்
கோர்த்திடவே பூ ஒன்றுமில்லை
சேர்த்துக் கை பிடிக்க சிதறும்
சொட்டுக்கள் முத்தாக ஜொலிக்கும்.



# வெய்யிலோ வெய்யில்

ஓட்டையாகிப் போனதுவோ
உச்சி மண்டை
வேட்டையாடிக் கொல்லுகிற
வெய்யிலாலே.
தட்டைத் தலையருக்கும்
திண்டாட்டம்
கட்டுக்கு கூந்தலுக்கும்
கஷ்டம் தான்.
முட்டாக்குப் போட்டாலும்
முகம் எரிக்கும்
வட்டக்குடைக்குமது
டாட்டா காட்டி விடும்
பெட்டிக் கடை முதல்
பெரிய கடை வரை
கூட்டம் கூடி நிற்கும்.
குளிர்பானம் தேவைப்படும்
எட்டி நடை போட்டாலும்
சுட்டுப்பாதம் கொப்பளிக்கும்
கொட்டும் வியர்வையிலே
குறையா அபிஷேகம்
விட்டுக் கொடுப்பானேனென்று
வியர்க்குரு படையெடுக்கும்
சுட்டெரிக்கும் வெய்யிலால்
பட்ட பாடெல்லாம்
பாட்டாய் எழுதுகையில்
மெட்டும் கொதி கொதிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுட்(ட்)டும் விழிச்சுடர்

கண்ணுக்கும் மொழியுண்டு
 கருத்தை அது வெளிப்படுத்தும்
எண்ணத்தின் வண்ணத்தை
 இயல்பாகக் காட்டிவிடும்.

உள்ளத்துக் காதல் தன்னை
 உணர்த்தும் ஒரு பார்வை
மெல்லக் கதை பேசி
 மௌனத்தை மொழிபெயர்க்கும்.

அடுத்தவர் பெறும் புகழால்
 அவஸ்தை உளம் கொள்ள
தொடுக்கின்ற பார்வையிலே
 தேளின் விஷமிருக்கும்.

குறுகுறுக்கும் பார்வை
 குமரிகளை அளவெடுக்க
அருவருப்பை வெளிக்காட்டும்
 அவர்கள் பதில் பார்வை.

அயலார் நடுவினிலே
 அட்டகாசம் குழந்தை செய்ய
புயலாய் ஒரு பார்வை
 புறப்பட்டுக் கண்டிக்கும்.

ஆடவன் ஒருவனுடன்
 அன்பு மகள் உரையாட
சாட்டையாய் விழும் பார்வை
 ஆத்திரத்தை அறிவிக்கும்.



விரும்பாத உறவினரின்
 வருகை தரும் எரிச்சல்
வெறுப்பைத் தெரிவித்து
 விரட்டும் பார்வை.

எதிரி தன் குரலொலிக்க
 எகிறிடும் கோபம்
சதிராடக் கண்ணில்
 சுட்டெரிக்கும் பார்வை.

காதல் கொண்ட பெண்
 கால் பார்த்து நடக்க
தூது சொல்ல வேண்டி
 தவிக்குமொரு பார்வை.

பாரில் மாந்தர் பரிமாறும்
 பார்வை சொல்லும் கதை நூறு
நேரில் அந்தப் பரிமாற்றம்
 நிகரில்லாக் கவிதையது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலிக்குக் கூலி தர



ஊர் விட்டே நான் வந்தாலும்
ஊர்மிளை போல வாழ்கின்றேன்
வேர்விட்ட காதல் ஈடேற
விரைவில் நானும் விலை கொடுப்பேன்.

சதியுடன் மாரீசன் மானானான்
பதிவிட்டு சீதை இலங்கை வந்தாள்.
சீதனம் உன் தாய் குறியானாள்
வதிவிடம் இலங்கையை நான் துறந்தேன்.

அணைக்கு அணில் தந்த கல்லாக
அஞ்சும் பத்துமென் சேமிப்பு
இணைக்கும் பாலம் என்னை உனை
உன்னன்னை கேட்ட ஒரு லட்சம்.

எரிந்து மாறன் மறைந்தாலும்
எழில்ரதி கண்ணில் தென்பட்டான்
விரிந்த கடலது தடுத்தாலும்
விழிகளில் நீயே நிறைகின்றாய்.

கதிர் வரக் கரையும் பனியாக
கனவிலுனைக் கண்டு கரைகின்றேன்
எதிர் வரும் உந்தன் நிழல் பட்டதுமே
எழுவேன் இன்னொரு அகலிகையாய்.
0



# ஐயோ பாவம்...

அங்கே ஒரு நாகம்
அதனருகே மண்புழு
படமெடுத்த நாகத்தைப்
பரிகசித்த மண்புழு
தலை உயர்த்தித் தானும்
நாகத்தைப் போல் நிமிர்ந்தது.

விடம் கொண்ட நாகம்
விமர்சனம் பண்ணாது
இடம் விட்டு ஒதுங்க
இதைக் கண்ட புழுவோ
மடம் கட்ட எண்ணி
மண் உதறிச் சிலிர்த்தது.

ஐயோ பாவமென்று
ஊர்ந்தே நாகம் செல்ல
நானே பெரியோன் - நாகம்
அதனால் பயந்ததென்று
ஏளனம் செய்தபடி
தானும் விரைந்தது காண்.

ஊர்ந்த நாகம் கண்டு
ஓடிய மக்கள் கூட்டம்
சேற்றில் மிதந்த அந்த
மண் புழுவை மிதித்து விட
குற்றுயிராக் கிடந்த புழு
கொட்டமது அடங்கியது.
0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையுலகு



கலைஞன் என்றான பின்னே
கடின உழைப்பு தான்
விலை பெற்றுச் செய்தாலும்
விவேகமும் தேவைதான்.

தேடி வரும் பெரும் புகழ்
திறமை மட்டும் இருந்திட்டால்
ஓடி ஓடி உழைக்கையில்
ஓய்வும் சொற்பம் தான்

உழைப்பும் துயரமும்
உலகுக்குத் தெரியாது
கலையுலகின் வெளிச்சத்தைக்
கண்டே அது பிரமிக்கும்.

எல்லோர்க்கும் இருமுகம் தான்
என்றாலும் கலைஞனவன்
நல்முகத்தைப் பாராது
நாலுகதை உலகு சொல்லும்

திரிசங்கு சொர்க்கத்தில்
திடமில்லா ஒரு வாழ்வு
புரியாத உலகுக்கோ
பொல்லாப்பும் பூரிப்பும்.

0

# கேளடா மானிடா


இன்னார் வாழ்வு இன்னதென
ஏற்கனவே அவன் எழுதிவிட்டான்
இன்னா செய்ய எண்ணிடினும்
இயல்பாயெல்லாம் நடந்தேறும்.

ஒருவரை ஒருவர் வீழ்த்திவிட்டு
உயர்வதிலென்றும் பெருமையில்லை
ஒருவரில் ஒருவர் தம்பெருமை
உயர்த்திக் காட்டில் சிறுமையில்லை.

முடியாதென ஒரு பயம் வந்தால்
முயல்பவன் திறமையில் வரும் கோபம்
கடிதென வரினும் ஆமையிடம்
முயலது தோற்றது சரித்திரமோ.

தலை கீழாக நின்றிடினும்
தீதுகள் என்றும் ஜெயிப்பதில்லை.
தலைமைப் பொறுப்பில் இறைவனவன்
தெரிவுகள் எல்லாம் அவன் சித்தம்.

0




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வீடு....

**அன்று:....**
அடிக்கடி கதவு தட்டி
அதையிதைக் கடன் கேட்கும்
அடுத்த வீட்டுத் தொல்லை
அது ஒரு துயர்க்கதைதான்.

பொருளொன்றைக் கண்டுவிட்டால்
புகுந்து நம் வீட்டினுள்ளே
புரட்டும் புரட்டலிலே
புனிதமது கெட்டுவிடும்.

பிள்ளைகள் கூட்டம் வந்து
பெரும்பாடு படுத்திவிடும்
நல்லதொரு நிலைப்பாட்டை
நம் வீடு துறந்துவிடும்

சந்தைக் கடை போல
சத்தமும் கூச்சலும் தான்
எந்நேரமும் வருவரென்று
இதயத்தில் படபடப்பு.

விடுபட்டெங்கேனும் ஓடிடவே
விருப்பம் கொண்டு முடிவெடுத்து
கடுகதி இரயில் பிடித்தே
கண்காணா(து) ஓடிவந்தோம்.

அடுத்த வீட்டுத் துன்பமில்லை
அவசரக் கடனால் தொல்லையில்லை
விடுப்பும் பேச ஆட்களில்லை
வில்லங்கமேதும் இனியில்லை.

**இன்று:........**

பொழுதது கரைகையிலே
புகுந்தது தனிமைத் துயர்
அழுதொருவர் முகம் பார்த்து
அயலாரைத் தேடுகிறோம்.

அவசரத் தேவையெனில்
அழைக்கவே ஆளில்லை
சுவாரஸ்யப் பேச்சின்றி
சுறுசுறுப்பும் வாழ்விலில்லை.

கலகலப்பைக் காணவில்லை
கட்டிப் போட்ட நிலை
விலகி வந்த அயலின் மாண்பு
விரைவிலே அறிந்ததுள்ளம்.

0





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிலார்....

அடிக்கடி எட்டிப் பார்க்கும்
அன்றைய நினைவுகள்
அடி வைக்கும் வழியெல்லாம்
அடிபட்ட வலிகள்.

ஓடிக் கை கோர்த்து
உள்ளத்தை வெளிக்காட்டி
ஆடிக் களித்த நட்பு
அரைக்காசு பெறவில்லை.

பள்ளிக் காலம் தொட்டு
பல்கலைக் கழகம் வரை
சொல்லில் வரா நட்பு
சொந்தம் மறந்த நிலை.

கூடப் பிறப்பெல்லாம்
கூட வராதென்று
நாடிய தோழமை
நவின்றது ஒருகாலம்.

நேய நட்புமொரு
நாளில் தேயுமென்று
காயம் பட்டபின்பே
கருத்தில் கொண்டதுண்மை.
0



# வேண்டுகோள்!


உஸ்....
அங்கென்ன சப்தம்
அசைவனவே நில்லுங்கள்.

அதோ....
ஆகாயத்தின் விழிகளைத்
தேக்கி
நினைவுகளை உலவவிட்டு
அங்கொருவன்
நிற்கிறானே....
அவனிடம் சொல்லுங்கள்.

காலங்கள்
வீணே கழிகின்றன
நினைவுப் பறவைகளின்
சிறகுகளை
வெட்டி விழுத்திவிட்டு
நிஜங்களைத்
தரிசிக்கும்படி!

அடடா.....
ஒருவனல்ல ஆங்காங்கே
ஒரு கோடி
வாலிபர்கள்.
பாதங்கள் மட்டுமே
மண்ணில் பதித்தபடி
அவர்களுக்கு
ஞாபகப்படுத்துங்கள்!

நாங்கள்-
பூலோகவாசிகளென்று.



இங்கே...,
கடமைகள்
காத்துக்கிடக்கின்ற
மண்ணின்
கிழிசல்களைத்
தைக்க வேண்டுமென்று
விரைந்துசென்று
சொல்லுங்கள்.
0

நன்றி
தடாகம் –ஆகஸ்ட் 1999




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லமை தாராயோ

ஓய்யாரக் கொண்டைக்குள்ளே ஊறும் பேனாய்
பொய்யான வேஷமிடும் தருக்கள் கூட்டம்
ஓய்வெடுக்கும் தர்மத்தின் முதுகின் மேலே
பேயாட்டம் போடுகின்ற நிலமையின்று.

அழுக்காற்றில் குளிக்கின்ற புழுக்களெல்லாம்
அதைப் பன்னீர் எனப் புகழும் அவல நிலை
கலி முற்றிப் போய்விட்ட காரணமோ
காசுக்கு விலைபோகும் கேவலமோ.

நெறிவிட்டுத் தரங்கெட்ட நீசர்தம்மை
நாக் கொண்டு அறம்பாடி அழிப்பதற்கு
வரமொன்று வேண்டிட்டேன் பராசக்தி
வல்லமை நீ தாராயோ எந்தனுக்கு.
0





# பணமல்ல பிணம்!

நாங்களும்
மனிதயினம் தான்!
இந்த -
நாட்டின் முதுகெலும்புகள்.

நேசத்தின்
விலையேற்றம்
அதிகரித்து விட்டால்
மலையகவுள்ளங்களின்
மனசு-
கொதிக்கின்றது!

பணத்தை கரங்கள்
தொட்டு விட்டால்
எங்கள் -
நாவுகளுக்குக் கூட
தேன்துளிதான்....!

ஏனெனில் -
பணம் தான் எங்களை
தினம்......தினம்....,
பிணமாக்குதல்லவா.....?

காசு....
இது முதலாளிமார்களுக்கு
தூசு அல்லவா......?

விலையில்லாப் பொருட்கள்
இலவசமாய் கிடைத்துவிட்டால்,
எங்கள் -
ஏழை மனசுகள்
செழிக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது சரி
மலையக மண்ணின் பிறவிகள்
திடீரென்று கூடும்
இந்த - விலைவாசியை - சுமப்பதெப்படி......!

ஆங்காங்கே -
கொழுந்துகளை
நோண்டுவதே
மலையகப் பிரசவங்களின்
தொழிலாகும்!

அட்டைகளுக்கு
குருதி பீச்சி -
தேயிலைக்கு
சிவப்பு நிறம்
கொடுப்பவர்கள் அல்லவா நாங்கள்!

தேனீர் சுவையில்
நிலை மறந்து
சுகம் தேடும்
கணக்கப்பிள்ளைகளும் உண்டு!

நாங்களோ-
விலையேற்றம்....,
வயிற்றுப்பசி... தாங்காத
இதயங்கள்!

ஏற்றுமதி வருமானத்தை
முதலாளிமார்கள் கூட்டினால்
நாங்கள் -
விலை வாசியை -
தடுத்து நிறுத்துவோம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துட்டுக்களை -
நாங்கள்;
தேடிச் சேகரிப்பது
எங்கள் குழந்தைகள் -
எங்களைப் போல்,
கஷ்டப்படக் கூடாது என்பதற்கே!

அதனால் தான்
பணம் என்றால்
எங்கள் இனத்தவர்களின்
பிணம் கூட
எழுந்து நிற்கும் !



# உஷ்ணம்!

உடல் மேனி
வரண்டபூமியில்
உஷ்ணவியர்வைகளால்
குளிக்கும்.

இதய நிலம்
நீர்வற்றி
வரண்டுகிடக்கும்.

சூரியகதிர்கள்
புளுக்கவெப்பத்தை
பீச்சும்போது
உடலில் -
அம்மைமுத்துக்கள்போல்,
வியர்வை-
பருக்களை வாரிக்கொட்டும்!

குளிர்காற்றை
தடவிக்கொள்ள
மனம் -
துடிதுடிக்கும்.

உடம்பை வாட்டும்
உஷ்ண வெப்பத்தால்
கால்கள்
தண்ணீரைத் தேடிச் செல்லும்.

குளிர் பிரதேசம் நாடி
பணக்கார இதயங்கள் சில
தினம் தினம்
நீர் (அருவி) தேடிச்
செல்லும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூசுகளைத் தட்டு

அண்ணா;
வாழ்வில் உனக்கினி
எது நடக்கனும்.....?
நடந்ததெல்லாம் உனக்கு
தாங்காத
வேதனை தான்!

உன்
முன்னேற்றம்
ஊருக்கு நற்பெயரைத் தேடித் தருகின்றது.
உனது -
நாமத்தின் வாசம்
கிராமத்தோடு வீசுவதால்!

உன்னுடைய
புகழை
சகிக்கமுடியாத
சிலருக்கு,
பொறாமை
எரிமலையாய் வெடிக்கின்றது!

வாழ்வில்
உனக்கினி
எது நடக்கனும்...,
நடந்ததெல்லாம் உனக்கு
தாங்காத
வேதனை தான்!



பதவி உயர்வு
பொறாமையுள்ளவர்களுக்கு முன்
உன்னை
உயர்வுக்குள்ளாக்கும் !

இதயமில்லாத மனங்கள்
உன்னை
அவமதிக்கத் தூண்டும்

தலைநிமிர்ந்து
நில்!
முன்னோக்கிய உன் காலை
பின்னோக்கி வைக்காதே!
வெற்றியுன்னை
தடவிக் கொள்ளும்!

அடுத்தவர் பொறாமைக்காக,
பொறுமையை-
இழந்து விடாதே!

அடாவடித்தனம்....
அட்டகாசம் மூலம்
எதையும்,
அடைந்துவிட முடியாது!

எழுத்துகள் மூலம்
எதையும் -
சாதித்து விட முடியும்!

கத்தியின் கூரை விட
பேனாவின் எழுத்துக்கள்-
மேலானது அல்லவா.....?

தலை நிமிர்ந்து
நட,
தூசுகளை;
தட்டிவிடு.!

சுறு சுறுப்பாகி விட்டால்
நீ-
புரிகின்ற சேவைகளை
யாரும்
தடைசெய்ய முடியாது!

ஊருக்குள்
உறவாடி மகிழ்வதை விட
நேசத்துக்காக
இருவரிகள்
எழுதுவதை
மேலாக கருதிக்கொள்!

எதற்காக -
பூவில் மலர்ந்தாயோ,
அதற்காக -உன்னை
தயார் பண்ணு!

நடப்பவையெல்லாம்
உனக்கினி
நல்லவைகளாகவே
அமையட்டும்!



# உன்னைத் தேடுகின்றேன்!



தென்றலாய் தடவிச் சென்ற
சமாதானமே
உன்னுடைய
மறைவிற்கு..,
என்னுடைய ஆழ்ந்த அனுதாபம்!

மனித ஆத்மாக்கள் பல
உன்னை
அவசரமாய்...,
அவசியமாய்...
தேடுகின்றன....!

நீ-
காணாமல் போயிருந்தாலும் கூட,
மானிடம்
எதிர்பார்ப்புக்கள் பலவற்றுடன்
உன்னைத் தேடி
அலைகிறது!

யுத்தக்கருவிகள்
சப்தம் போட்டு...,
சித்திரவதை செய்கையிலும்
உன் - நாமம்
மனத்திரையில்
தினமும் நிழலாடும்!

பரிதாப மனநிலையிலும்
உன் எதிர்பார்ப்பு...?

பேச்சு வார்த்தைகளை
உன் பக்கம்
இழுப்பாய் பல விதமாய்
எண்ணங்களால் எம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனமாக்கி விட்டால்
உன்னைச் சுற்றி
புகழ்பாடி மகிழ்வார்கள்
தேற்றுவாய் விதம்விதமாய்!

நீ...,
காட்டிய நிகழ்வுகள்
யாவும் உன்னை
தேடி வந்த
பாக்கியமல்லவா...?

மனதிற்கு ஆறுதலென்றும்
சுகங்களுக்கு தோதென்றும்
சமாதானமே-
உன்னை நான்
தேடவில்லை.

இதமான உன்னுடைய
பெயருக்குப் பின்னால்-
இருண்ட பூமியிலிருந்து
ஆயிரமாயிரம்
அப்பாவி இதயங்கள்
உயிரை இழக்கின்றன.

அதனால் தான்
பிரச்சினைகளுக்கு
தீர்வொன்றை
தேடியே...,
தினம், தினம்
தவிக்கின்றேன்....!





# யார் சொன்னது....?

அது...,
என் உணர்வுக்கு எட்டாத
தூரத்தில் -
செத்துக் கிடக்கிறது!

நீ -
சொன்னவைகளும்,
சொல்லத்துடிப்பவைகளும்
எத்தனை நாட்களுக்குத்தான்...?

நிம்மதி....? ?



எனக்கு எதுவும் கிடைக்கவில்லை.
உடம்பின் ஆரோக்கியம்கூட;
தொலைந்து போனது.

எவ்வளவோ மன ஆறுதல்பெற
ரணத்தழும்புகளை -
சுகப்படுத்திப் பார்த்தேன்.
உள்ளிருந்து -
நிம்மதியின்மையின் ரணச்சேல்!

கனவுகளில்...,
கற்பனைகளில்...,
உலகத்தை சுற்றிப் பார்க்கலாம்.
காட்சி வரும்....
கவிதை வரும்...
காதல் வரும்....
நிம்மதி வராது!

கனவு கண்டு சிரிக்கலாம்.
அந்தச் சிரிப்பின் எல்லையில்
நிம்மதி பிறக்குமென்று
யார் சொன்னது...?

சந்தோஷமாயிருப்பதாய்
கவிதைகளில் எழுதலாம்
எழுதுவதெல்லாம் -
உண்மைதானென்று
சொல்லக்கூட
மனதில் -
நிம்மதி வேண்டுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்ல... மெல்ல...

சந்தோஷமாயிருந்த
மனங்கள் மீது
மெல்ல மெல்ல
பதற்றம் தடவியது.
திடீரென்று
சமாதானப் பேச்சுக்கள்
இடை நிறுத்தப்பட்டது!

படுக்கையில்
கனவொன்று
முன் கூட்டியே
நிழலாய் தொடர்ந்தது.

நடுக்கம் வந்து - என்
உடம்போது ஒட்டியது;
நிம்மதி -
காணாமல் போய்விடுமோ
என்று!

செய்திகள்
காற்றோடு கலக்கின்றன...
நல்லிதயங்கள் - சில
தங்களுக்குள்
பிரார்த்தித்துக் கொண்டு;
நிரந்தர....,
சமாதானத்தைத்தேடுகின்றன!

தலைக்கனம் மேலோங்கிவிட்டது!
சிந்தனைகள் -
திசைமாறிப் போனதால்!




நீதி...,நியாயம் கேட்டு வந்தவனை
எதிர் பாரத்து
பேச்சுக்கள்
புயலானது...!

ஒரு இனம்
புறக்கணிக்கப்பட;
மறுயினம்
தோள்கொடுத்து உதவுகிறது!

ஆமாம்...!
சமாதானம் தேடி வந்தவர்களை
ஏமாற்றி விட்டு.,
சில இதயங்கள்
மீண்டும்
கலவரங்களை
தூண்டுகின்றன!

நடுக்கம் வந்து - என்
உடம்போடு ஒட்டியது.
மீண்டும் -
என் நிம்மதி -
காணாமல் போய்விடுமோ
என்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனாவும்! எழுத்துகளும் !!

இலக்கியம்
என்னுள் செழிக்கும்
இலட்சியம்

கற்பனையோ-
என்னுள் பொங்கிவடியும்
ஊற்று!


விழாக்காலங்களில்
கவிதா
பாக்களை பொழிவாள்
தூங்குவோர் மனங்களை
தட்டி எழுப்பிட!

பாராட்டு நிகழ்வில்
சகீ...,
எழுத்துக்களைத் தேடுவாள்
பேனையில் சிதறப்பட்ட
முத்துக்களை மாலையாக்கிட!

விடுமுறை நாட்களில்
பாராட்டு மடல்கள்
பத்திரிகையாய் வரும்!

இலக்கிய இதழ்களிலோ
பெயர் வரும்
பொன்னாடை போர்த்துவதாய்..!

ஓய்வு நேரங்களில்
பாராட்டுகளைப் பார்த்து நான்
புன்னகை வடிக்கலாம்!



போட்டி பொறாமை
தோன்றும்
மனங்களிலோ...
நான் -
தாளோடு தான்
பேச முடியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெற்றிக்கண்

(கவிதைத் தொகுதி)

நாகபூஷணி கருப்பையா

ISBN 955-8913-08-I

சிந்தனை வட்டம்
நாளைய சந்ததியின் இன்றைய சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org